தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ௵ மாசி ௴ 14 ௳ (25-2-'23.) | ப. 42

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 433
(உதவி பத்திராதிபர்)
2. அமர்நீதி நாயனார் ... 434
[துகளன்].
3. எங்கள் சமாஜம் ... 434
4. புயற் காற்று ... 437
V. [நாராயணையர், M.A., M.L.,]
5. தேச அஷ்டகம் ... 439
[K. N. சிவராஜ பிள்ளை]

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)
ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்.]

ஸ்ரீமான் தாஸ் கட்சியார் வெளியிட்டிருக்கும் சுயராஜ்ய நிர்மாணக் குறிப்புகளை ஜனங்கள் ஏற்றுக் கொண்டு அந்நிர்மாண வேலைகளை தீவிரமாய்ச் செய்து வந்தால் சுயராஜ்யம் சித்தியாகிவிடும். தேச க்ஷேமத்தையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் காக்கக்கூடிய ஓர் அரசாங்க ஸ்தாபனத்தை நமது காங்கிரஸ் இயற்றுவிட்டால் காங்கிரஸின் வேலைகளெல்லாம் பலிதமாகாது. வரி மறுப்பு நிகழ்ச்சிக்கு முன்னதாக இந்த ஸ்தாபனமே முக்கியமானது. பின்னரே வரி மறுப்பு நிறைவேறும். இந்நிலைமை வந்தவுடன் பிரிடிஷ் இந்திய அரசாங்கமே நமது கோரிக்கைக்கு இணங்கியாவது படுத்தாவது விடும். இவ்விதம் தத்கால அரசாங்கத்தை திருத்தவும், திருத்த முடியாது போனால் அழிக்கவும் முயற்சிக்கும் காங்கிரஸின் லட்சியம் கைகூடிவிடும்.

* * *

சுயராஜ்ய நிர்மாணக் குறிப்புகளை சற்று சுருங்கக் கூறுவாம். கிராமங்களை உயிர் நிலையாக வைத்து சுயராஜ்யம் கிராமங்களுக்கு தனித்தனியே கொடுத்து, பின் ஜில்லா, மாகாணம், இந்தியா இவைகளுடைய பொது நலத்தையும் பொதுக்காரியங்களையும் நிர்வகிக்க பஞ்சாயத்துகளை ஏற்படுத்துவதே சுயராஜ்ய அரசாங்கத்தின் கருத்து. ஸ்ரீமான் தாஸ் கட்சியாரும் சட்ட ஸபை பிரவேச விஷயமான பிரசாரத்தை விடுத்து இந்நிர்மாண வேலைகளிலேயே ஈடுபட்டு காரியங்களை நடத்தி வந்தால் தேச ஸேவை ஜயத்துடன் செய்ததாகும். இந்நிர்மாண வேலைகள் ஸம்பந்தமாய் காங்கிரஸில் கட்சி பேதம் ஏற்படவே காரணமில்லை.

* * *

சட்டஸபை பஹிஷ்கார கட்சியாருக்கு ஓர் கோரிக்கை: ஸ்ரீமான் தாஸ் விடுத்திருக்கும் சுயராஜ்ய, நிர்மாணத்திலும் நீங்கள் உழைக்க வேண்டியதே. கதர்ப் பிரசாரத்தில் நீங்கள் பூண்டிருக்கும் பக்தி சிறந்ததாயினும், முன்னதாக சுயராஜ்ய அரசாங்க நிர்மாணமே அவசியமானது. பின்னர் கதர்ப் பிரசாரத்திற்கு சிரமமேயில்லை. வெளி நாட்டு உடைகளை உங்கள் தேசத்திலேயே வராமலிருக்கும் வண்ணம் வேண்டிய உபாயங்களைக் கைக்கொள்ளலாம். கட்சி பேதததால் விளையும் தீங்குகளை அகற்றி சுயராஜ்ய அரசாங்க ஸ்தாபனத்தை மேற்கொள்ளுவது தங்கள் கடமை.

* * *

ஆப்கானிய கவர்ன்மெண்டார் வருகிற புதன்கிழமையன்று (28-2-23) சுதந்தரத்திருவிழாவை வெகு விமரிசையோடு கொண்டாடுவார்களாம். அமீரும் அவரது ராஜஸபையாரும் ஜலலபாத் (Jalalabad) என்னும் இடத்தில் தங்கியிருக்கிறார்கள். நமது டில்லிமாநகரிலிருந்து ஆப்கானிய பிரதிகாவல தலைவரும் (Consul-general) ஷை உத்ஸவத்திற்கு அழைக்கப்பட்டு பெஷாவார் (Peshawar) மார்க்கமாக செல்லுகிறார்.

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெரு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

அமர்நீதி நாயனார்.

(துகளன் எழுதியது.)

வண்டம் பொழிற் பழையாறை யமர்நீதி வெண் பொடியின்
தொண்டர்தரித்த பிரார்க்கு நல்லூரின் முன் கோவண நேர்
கொண்டிங் கருளென்று தன் பெருஞ் செல்வமுந் தன்னையுந் தன்
ஒண்டம்தி நுதலாளையு மீந்த தொழிலினனே

—திருத்தொண்டர் திருவந்தாதி

பழையாறைப் பதியில் வணிக ஜாதியிற் பிறந்த இவர் திருநல்லூர் என்ற திருத்தலத்திற்கு வரும் அடியார்கள் உறைவதற்கு ஒரு மடம் கட்டுவித்து, அங்கே அவர்களுக்கு அன்னம் அளித்து கோவணமுதலிய நல்லுடைகளும் ஈந்து, யுருகு சிந்தையில் மகிழ்ந்துறை நாளிடை ஒரு நாள் இவரது அன்பை வெளிப்படுத்தி சிவனடியார்கள் கட்டும் கோவணத்திற்குரிய பெருமையையும் விளக்குவாராய் ஈசனார் பிரம்மசாரியுருத்தாங்கி அம் மடத்திற்கு வந்தனர்; வந்த பிரம்மசாரியாரை நாயனார் உபசரித்து "இம்மடம் நீர் வந்துறைதற்கு யாது பாக்கியம் செய்ததோ" என்று எதிர்கொண்டு முகமன் கூறி அமுதுசெய்ய அழைக்கவே, அவரும் அமுதளித்து நல்ல கோவணங்களும் அளிக்கின்றீர் என்று கேள்வியுற்று வந்தேன்; இதோ நதியில் ஸ்நானம் செய்து வருகிறேன்; அதுவரை இந்தக் கோவணத்தை நனையாமல்வைத்திரும்; ஒருவேளை நான் கொண்டு போகும் உடை வரும்போது நனைந்துபோனாலும் இது கையிருப்பாய் இருக்கட்டும்" என்று சொல்லி ஒரு கோவணத்தை நாயனாரிடம் ஒப்புவித்துச் சென்றார்; சென்றவர் திரும்ப வரும்போது நல்ல மழை; அவருடை யெல்லாம் நனைந்துபோகவே "நான் தந்த கோவணத்தைக் கொடும்" என்று கேட்டார்; மாயையின் அதிசயத்தால், நாயனார் எங்குதேடியும் அந்தக் கோவணம் தென்படாது மறைந்தது; மனைவியாரொடு மன்னிய கிளைஞரும் தாமும் இனையது ஒன்று வந்து எய்தியதே என்று இடர் கூர்ந்து நினைவதொன்றிலராய் வருந்தினார்; பிறகு பிரமசாரியார் புனைய வேறு நல்லதோர் கோவணங் கொண்டு அவர் முன் சென்று "ஐயன்மீர்! நீர் தந்த கோவணத்தை வைத்தவிடத்தும் வேறு இடத்தும் காண்கிலேன்; மற்றுமோர் இடத்தில் ஒளித்தாரும் இல்லை; என்ன மாயமோ அறியேன். ஆதலின், தயை கூர்ந்து வேறு நன்கு நெய்தமைத்தோர் புதிய கோவணமொன்று கொணர்ந்திருக்கிறேன். அதை ஏற்று என்னை க்ஷமித்தருளவேண்டும்" என்று வேண்டினார் நாயனார்.

அதைக்கேட்டு, "நன்று, நன்று; நின் நிலைமை; நல்ல கோவணங் கொடுப்பர் என்று மேனாள் உலகில் சொல்லுவித்தது என் கோவணம் கொள்ளவது கருதியோ? உன் வாணிபம் மிகச் சிறந்ததே! என்று ஏசவும் தலை குனிந்து வருந்தி அடி பணிந்து" எவ்வாற்றானும் காப்பாற்றலாமை என இருந்தது கண்ட பிரமசாரியார், "சரி; இதோ இருக்கும் என் மற்றொரு கோவணத்திற்கு நிகராய் துலையிட்டுப் பொருள் கொடுப்பின் இப்பழி நீங்கலாகும்" என்று சம்மதிக்க, நன்றென அன்பரும் ஒரு துலை நாட்டினார்; மற்றவரும் தன் கோவணத்தை ஒரு தட்டிலிட்டார்; அப்போது அன்பர்க்களிக்க முன் வைத்த கோவணங்களை யெல்லாம் அடைய ஒன்றொன்றாய் மற்றொரு தட்டின் மீதிட்டும் துலை நிலையுறாதது கண்டு அமர் நீதியார் வேறு பட்டுகளும் பல மென் துகில்களும் இட்டார்; அப்போதும் அந்தத்துலை நிறை நில்லா தொழிந்தது; பிறகு நல்ல பொன்னோடு வெள்ளியும் நவமணித் திரளும் ஆகிய தம் தனமெல்லாம் இட்டும் பயன் படாதது கண்டு "தலைவ, யானும் என் மனைவியும் இச்சிறுவனும், துலையில் ஏறிடத் தகுமேல் எம்மை ஏற்று அருள்" என்று அமர்நீதியார் வேண்ட, ஈசனாரும் அடியாரைக்குடியுடன் வானுலகேற்றச் சம்மதிப்பவர் போல் உடன்பட்டார்; சிவனடியார் கோவணப் பெருமைக்கு நிகர் அடிமைத் தொண்டு புரியும் அடியார்களை யன்றி வேறு யாது நிகராகும்? என்பதை விளக்கிக் காட்ட நின்ற துலையும் இருதட்டும் ஒத்து நேர் நின்றது; உடன் இவ்வடியார் அப்படியே துலையுடன் சிவலோக மேறினர். என்பது இவரது கதை.

அடியாருக்கு வேண்டிய உணவு ஆடை ஆபரணங்கள் இவைகளை மட்டும் உதவுவது ஒருபெருமையாகாது; சமயம் வரின் தன்னையும் தன்மனைவி மக்களையுங்கூட அவர்களுக்கு அர்ப்பணமாகக் கொடுக்கத் துணிந்து நடப்பவரே மெய்த் தொண்டர்; யாவற்றையும் தன்னை அண்டின ஒரு அதிதிக்குக் கொடுத்துகந்த இவ்வள்ளலாரின் சரிதை தன்னுடலை பருந்துக்கு இரையாக அளித்த சிபிச்சக்கிரவர்த்தியின் வரலாற்றைப் போல் சிறப்பற்றிருக்கின்றது.

எங்கள் சமாஜம்.

நாங்கள் மத்தியான வேளைகளில், எங்கள் வீட்டு புருஷர்கள் அவரவர்கள் வேலைக்குச் சென்றதும் ஓர் சிறு சபை கூடுவது வழக்கம். என் வீடு எல்லா நடைய வீடுகளைக் காட்டிலும் சிறிது பெரிதாயும், சட்டடம் குறைவாயும் இருப்பதால், பெரும்பான்மையும் அச்சபை என் வீட்டிலேயே நடை பெறும். இவவுலகின்கண் நடைபெறும் ஒவ்வொரு சீர்திருத்தங்களையும், புதிதாய் பிரப்பிக்கப்படும் கொள்கைகளையும் எங்கள் சிறு சபையில் சீர்தூக்கி, ஆராய்ந்து அதன் பலா பலன்களை தீர்மானம் செய்வது வழக்கமாதலால் அதே விதம் ஒரு நாள் சென்ற வாரத்தில் எங்கள் வீட்டு ஆடவர்கள் வெளியிற் சென்றதும் சபை கூட்டப்பட்டது. சாதாரணமாய் மத்தியானம் 12 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையில் நடத்துவோம். மத்தியான வேளையில் காலத்தைக் கழிக்க இது ஒரு பொழுது போக்காய் அமைந்திருந்தது. தற்சமயம் வீட்டு பெரியவர்கள் தை பூசமாடுவதற்கு திருவிடமருதூர் போய் இன்னும் திரும்பி வராதபடியால் எங்கள் சபை, வழக்கத்தை விட சீக்கிரமே, தொடங்கி நடை பெறலாயிற்று.

நான் போஜனமருந்தி, வெற்றிலை தட்டுடன் என் வீட்டுக் கூடத்தில் வந்து அமர்ந்தேன். நம்மவர்களுக்குள் கூடந்தான் "டிராயிங் ரூமாய்" உபயோகப் படுத்தப் படுவதால் அக்கூடமே எங்கள் வீட்டு "டிராயிங் ரூமாய்" அமைக்கப்பட்டது. அது விசாலமாயும், வழவழப்பான செங்கற்களால் பதிக்கப்பட்டிருந்தது. வெள்ளைச் சுவர்களில் நான்கு புறமும், அழகிய சித்திரப் படங்களும், நம் நாட்டில் தற்காலம் கொண்டாடப்படும் தேசபக்தர்களின் உருவங்களும் தொங்க விடப்பட்டிருந்தன. கீழே ஒரு புதிச்சேரிப்பாய் வட்

டமாய் விரிக்கப்பட்டிருந்தது. நான் அதில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொள்ள ஆரம்பித்ததும் என் அடுத்தகத்துக்காரி, ரங்கம், அப்பொழுது தான் போஜனமருந்தி கையில் வெற்றிலை சுருள் பிடித்த வண்ணம் வர, நான் என்னம்மா! வெற்றிலைகூட கையில் கொண்டுவரவேண்டுமோ? என்னுடன் இவ்விடமே போட்டுக் கொள்ளக் கூடாதோ? உங்கள் ஜாதிக் கட்டுப்பாட்டை அது கெடுத்து விடுமோ? நான் என்ன உங்களைப்போல் வேதமோதும் ஜாதியில் பிறக்கவில்லையா? என்று பரிஹாசமாய் கேட்க, அவளும் என்னவோ அம்மா! பனை மரத்தின்கீழ் நின்று பாலை அருந்தினாலும் கள் என்று தானே கூறுவார்கள் என்ற அச்சந்தான். நான் அடிக்கடி வருவதே என்னை சேர்ந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை. போன வாரம் எங்கள் சம்பந்தி அம்மாள் இவ்விடம் இரண்டு நாள் இருந்து போவதற்குள் ஊரில் போய், சம்பந்தி என்னை, முழு ஸ்மார்த்தச்சியாய் விட்டாள். எப்பொழுதும் அடுத்தகத்துக் கல்யாணி வீட்டில் தான் வாசம். அவர்கள் வீட்டில் சாப்பிடவில்லையே அது ஒன்று தான் பாக்கி என்று புகார் சொன்னாளாம். எல்லாம் வெளி வேஷத்திற்குத் தான் என்றதும் இருவரும் நகைத்து தாம்பூலம் போட்டுக் கொண்டோம்

சிறிது நேரத்திற்கெல்லாம், என் பால்யமுதல் விளையாடி வந்தவளான என் தோழி ருக்மணி மிகுந்த முக வாட்டத்துடன் எங்கள் சபையை அலங்கரிக்கச் சபையின் மற்றைய அங்கத்தினர்களான விசாலாக்ஷி, கமலம், இருவரும் வந்துசேர்ந்தார்கள்.

அவர்கள் சற்று தூரத்தில் வசிப்பதால் வெய்யிலில் வந்தது முகம் சிவந்து, நிறைய முத்துக்கள் போன்ற வியர்வை துளிகள் அரும்பியிருந்தன. நான் உடனே மின்சார விசிரியைத் திருப்ப அது அதிவேகமாய் அவர்கள் சிரமத்தைத் தணிப்பதில் ஊற்றமாய் சுத்தியது. நூதன நாகரிகத்தை சிலாகித்து கொண்டாடியதில் சிறிது நேரம் செல்ல என் சிநேகி ருக்மணி மட்டு முக மலர்ச்சியுடன் எங்களுடன் சேராமல் இருந்ததைக் கண்டு அவள் விசனத்தின் காரணத்தை வினவ, அவள், என்ன சொல்வது, எல்லாம் சம்சாரத்தின் தாபந்தான், திரும்ப, திரும்ப, அக்கவலையேதான் நம்மை மீளா சாகரத்தில் அழுத்திவிடுகின்றது. அதைத் தாண்டியவர்கள் தான் நித்தியமான சுகத்தையும் ஆநந்தத்தையும் அடைவார்கள் என்றனள்.

ருக்மணி! இவ்வரிய வேதாந்தம் எங்கு கற்றுணர்ந்தாய்? மிகுந்த ஞானியாய் தோன்றுகிறாயே, உன் அகத்துக்காரர்கூட நவீன நாகரிகத்தைச் சார்ந்தவராய்க் காணப்படுகிறாரே ஒழிய பழைய காலத்து மனிதராய்க் காணவில்லையே. திடீரென்று உனக்கெங்கிருந்து வந்தது இவ்வளவு வேதாந்தமும் என்றோம்.

அந்த புது நாகரிகத்தின் தொல்லை தான் என் மனதை வேதாந்த முறையில் திருப்புகின்றது. என் மூத்த பெண்ணுக்கு இந்த வருடம் கல்யாணம் செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக் கொண்டிருப்பது தான் உங்களுக்கெல்லாம் தெரியுமே. தை மாதம் பிறந்து விட்டதே குழந்தைக்கு 11 வயது வருகிற பங்குனியுடன் முடிந்து 12 பிராயம் தொடங்கலாயிற்றே, சும்மா யிருக்கலாமா? என்று நேற்றிரவு என் அகத்துக்காரரைக் கேட்டேன். அவர் சொல்வதைக் கேட்க என் மூளையே கலங்கி விடும்போல் இருக்கின்றது எனவும், நான், ஆம், இரண்டு நாட்களுக்கு முன்கூட ஆசார சீர்திருத்த சபையில் ஓர் பெரிய உபன்யாசம் செய்தாராம். எல்லாரும் நிரம்ப நன்றாய் இருந்ததென்று கூட சொல்லிக் கொண்டார்கள். அப்படியிருக்க அதன்படி நடக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாரோ, என்னவோ என்று மொழிந்ததும்.

அதெல்லாம் வாயால் சுலபமாய் பேசி விடலாம், நீயும் என்னைப்போல் சம்சாரியாய் இருந்தால் அந்த கஷ்டம் உனக்குத் தெரியும். இது ஒரு பெண்தானே, இன்னும் இரண்டு குழந்தைகளுக்கு கல்யாணமாகி க்ஷேமமாய் வாழ்ந்திருக்க வேண்டாமா? இப்படி வாயை மூடிக்கொண்டிருக்கலாமா என்று கேட்டேன். எல்லாம் எனக்குத் தெரியும், அவளுக்கு பதினொன்றுகூட ஆக வில்லை, அவள் இன்னும் எவ்வளவோ வாசிக்க வேண்டும். அதற்குள் விவாகம் வேண்டும். அதற்குள் விவாகம் செய்தால் படிப்பிற்கு இடையூறாய் முடிந்துவிடும். ஸ்திரீகளின் கல்விக் குறைவினால் தான் நம்முடைய தேசம் இதர நாடுகளைப் போல் முன்னேற்றம் அடையவில்லையாம். நேற்று பத்திரிகையில் கூட யாரோ எழுதியிருக்கிறாரும். ஆசார சீர்திருத்த சபை முன்போல் நடைபெறுவதில்லை என்றும், மதபேதம் நீங்கி எல்லோரும் ஒரே பந்தியில் போஜனமருந்தி, ஏற்ற தாழ்வற்று ஒருவருக்கொருவர் சம்பந்தமும் செய்து கொண்டால் தான், தேச நன்மையும் ஸ்வய ஆட்சியும் உண்டாகுமாம். அவ்விதமே தான் "மகாத்மாகாந்தியும்" கூறுகின்றாராம். ஆகையால் ஆசார சீர்திருத்த சபையின் அங்கத்தினராய் இருந்து, தான் அதற்கு மாறாக நடப்பது கொள்கைக்கு விரோதமும், பேச்சுக்கு இடமுமாகுமென்று என்னகத்துக்காரர் சொல்லுகிறார். மேலும் கல்வி பயிர்ச்சியில்லாமல் என் போன்ற நாட்டுபுறத்து பெண்களை விவாகம்கொண்டதினால் தான், தான் எண்ணியபடி நடத்த இடையூறாய் நிற்கின்றேனாம். நானும் கல்வி பயின்றிருந்தால் தற்காலம் நடைபெறும் ஸ்வராஜ்ய போரையும், நமது தேசத்தின் தாழ்ந்த நிலைமையும் உணர்ந்து அதற்குத் தக்கவாறு நடக்க என்மனது இடந்தருமாம். இன்னும் எவ்வளவோ சொல்லுகிறார். எனக்கே என்னைவிட வித்தையில் என் பெண் சிறப்படைவது மனதிற்கு அருவருப்பை அளிக்கின்றதாம். அவளும் என்னைப்போல் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேனாம். பெண்களுக்கு லக்ஷணம், நல்ல கல்வி பயின்று, புருஷர்களுக்கு உற்ற துணையாய் நின்று, நாட்டின் க்ஷேமத்திற்காக அவர்கள் படும் கஷ்டங்களைப் பகிர்ந்து இதர தேசத்தவர்களுக்கு முன்பு நம்முடைய தேசத்தை சிறப்புற்று விளங்கச் செய்யவேண்டுமாம். சில நாட்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் மனையாட்டியார், விலை யுயர்ந்த ஆடை, ஆபரணங்களை தவிர்த்து சாதாரண பருத்தியுடை உடுத்து, நம் தேசத்தின் முன்னேற்றத்திற்கு நாம் தடையாய் நின்றோம் என்ற வசை சொல்லை நம்முடைய செவிகள் கேட்காவண்ணம் நடந்து கொள்ளுங்கள் என்று உபன்யாசம் செய்தாராம். அதெல்லாம் நன்றாய் வாசித்திருந்தாலல்லவோ உனக்கு புரியப் போகிறது என்று சொல்லுகிறார். அவருக்கென்ன குடும்ப சிரமமே உறைக்கவில்லை. குழந்தைபோல் பேசுகிறார். என் மாமியாரும் இந்த

வருஷம் குழந்தைக்குக் கல்யாணம் செய்யாவிட்டால் தான் திரும்ப இவ்வூர் வருவதில்லை என்று கோபித்துக்கொண்டு பூசத்திற்கு போனவர் இன்னும் ஒருவரிகூட க்ஷேம சமாசாரத்திற்கு எழுதவில்லை. இப்படிக்கெல்லாம், இப்புதிய நாகரீகம் தலை தெரியாமல் கூத்தாடச் செய்து நம்முடைய பண்டைகால வழக்கங்களை பாழாக்குகின்றது. எனக்கு பதில் ஒன்றும் சொல்லவே தோன்றவில்லை. துக்கம் நெஞ்சடைத்து கண்களில் நீர் ததும்பி நின்றது.

எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள், நீங்களாச்சு, உங்கள் பெண்ணாச்சு, உங்களைப் பெற்ற தாயாரையும் கொண்ட பெண்டாட்டியையும் துன்புறுத்த உங்கள் நவீன தர்மம் புகட்டுகிறாப்போல் இருக்கின்றது. நானே படிக்கவில்லை என்று வருந்தும் போது என்குழந்தைகளுக்கு வேண்டாம் என்பேனோ! படிப்பென்றால் நல்ல வழியில் இருக்கவேண்டும். நம்முடைய மதாசாரங்களை குழந்தைகளுக்கு நன்றாய் புகட்ட வேண்டும். தேச சரித்திரத்தையும் கூடுமான வரை கற்பிக்க வேண்டும். நல்லொழுக்கம், குடும்ப போஷணைக்கு வேண்டிய சுகாதார நூல்களும், குடும்பபாரத்தை வஹிக்கவல்ல புத்திவன்மையும், அவைகளை நடத்த வேண்டிய முறைமையும் கற்பிக்காமல், ஆங்கில பாஷை மட்டும் பயிலுவதால் என்ன வரப்போகின்றது. ஓர் தாயுமானவர் பாட்டு, ஒரு திருக்குறள் ஏதாவது குழந்தைகளுக்குத் தெரியுமோ. வெறும் கூத்தாடித் தனத்தைத் தவிர வேறொன்றும் அவர்கள் கற்கப் போவதில்லை. புராதன வழக்க ஒழுக்கங்களையும், கற்பின் பெருமையையும் இழக்க நேர்வதைத்தவிர, அடையப்போவதொன்றுமில்லை. கீதையில் கிருஷ்ண பகவான் கலிகாலம் முற்ற ஜாதி வர்ணாசிரமங்கள் நழுவி விடுமென்றும், கற்பின்மை செழித்தோங்கி பாவங்கள் விருத்தி அடையுமென்றும் கூறியுள்ளார். கடவுள் வாக்கு பொய்யாகுமோ, அதற்குத் தான் நீங்கள் எல்லாரும் இப்படி கிளம்பியிருக்கிறீர்கள் என்று கூறிவிட்டு சமையலறைக்குள் போய் விட்டேன். நான் சொன்னது மனதில் பட்டதோ என்னவோ பதில் ஒன்றும் கூறாமல் யோஜனையில் ஆழ்ந்திருந்தார். இரண்டு நாட்கள் பொருத்து மறுபடியும் கல்யாணத்தைக் குறித்து பேசலாம் என்று நினைக்கிறேன். இது தான் என் வேலைக்குக் காரணம் என்று கூறி முடித்தாள்.

உடனே என் தோழி ரங்கம், நானாய் இருந்தால் இன்னும் நன்றாய் பதிலுரைத்திருப்பேன். சில மாதங்களுக்கு முன்பு ஓர் பத்திரிகையில் அமெரிக்கா ஆடவர்கள், தங்கள் மனையாட்டிகள் வீட்டு வேலைகளைக் கவனிக்காமலும், குழந்தைகளின் பாதுகாப்பை திரஸ்கரித்தும், கணவர்களையும் கொஞ்சமேனும் மதியாமல் நடந்து வரும் கஷ்டங்களைப் பொருக்க முடியாமல் ஓர் நியாயாதிபதிக்கி தங்கள் குறைகளை விசாரித்து அவர்களை அடக்க ஓர்புதிய சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று முறையிட்டு மனுக்கொடுத்திருப்பதாய் பிரசுரம்செய்யப்பட்டிருந்ததை இவர்கள் கவனிக்கவில்லைபோலும். அப்படியே நமதுதேசமும் சீரழிய வேண்டுமென்று இவர்கள் விருப்பம் என்று தோன்றுகிறது. இவர்களைப்போல் நாமும், பி. ஏ. எம். ஏ. பட்டங்கள் பெற்று பலவாரான உத்தியோகங்களில் அமர்ந்து விட்டால் இவர்கள் பிண்டம் பெருங்காயம் தான். ஏதோ பெரியவர்கள் சென்ற வழியிலேயே செல்ல வேண்டுமென்றும், அது தான் ஸ்திரீகளின் பிராசீன தர்மமென்றும், இவர்கள் சொல்லுக்கடங்கி குடுத்த முறைமையை வழுவாது செலுத்தி வருவது இவர்கள் உணர்ந்தார்கள் இல்லை. ஓர் ஆங்கிலேய நூலாசிரியர் இந்தியா இதர தேசங்களைப் போல் ஓர் காலத்தில் செழித்து மற்றொரு காலத்தில் நிலைகுலையாமலும் நிற்பது இந்தியர்களின் சீலமும், அவர்கள் மாறாத கடைபிடித்திருக்கும் ஆர்ய தர்மத்தின் மகிமையே என்று வியந்து கூறியுள்ளார். வயதாய் விவாகம் செய்து கொள்வதில் என்ன சுகம் ஏற்படப் போகின்றது. ஸ்திரீ தர்மத்தையும் வழுவா கற்பின் மகிமையையும், நம்முன்னோர்களும், புராணங்களும் முறையிட்டிருப்பதின் பயனென்ன? நமது கற்பை ஆசார சீர்திருத்தத்திற்கு இரையாக்கி நம்முடைய அச்சிறந்த ஆபரணத்தை பிறர் நகைக்கும் வண்ணம் இழந்து விடுவோம் என்பதைத் தவிர வேறொரு நலமும் நாம் அடையப் போவதில்லை. எப்பொழுதும் ஸ்திரீகளின் சரீரமானது பாதுகாப்பில் இருக்க வேண்டுமென்பது நம் முன்னோர்களின் கொள்கை. பால்யத்தில் பிதாவும், யௌவனத்தில் கணவனும், முதிர்ந்த வயதில் புதல்வனும் காக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பிறருடைய ஆசாரங்களை கொள்வதில் நமக்கு இழிவைத் தவிர, பெருமை உண்டாகப் போவதில்லை என்று கூறிமுடித்தாள்.

பேஷ் நன்றாய் உரைத்தாய், ஏது பெரிய உபன்யாசம் செய்வாய் போல் தோன்றுகிறதே. இதுகாறும் உனக்கு இவ்வளவு தெரியுமென்று எங்களுக்கு புலப்படவில்லை என்று புகழ்ந்து எனக்கும் அப்படியேதான் தோன்றுவதாயும் இப்பொழுது நடைபெறும் வழியில் நம் சிறுமிகளுக்கு கல்வி புகட்டுவது நம்தேசத்திற்கும், குடும்பத்திற்கும் செழிப்பை அதிகரிக்காதென்றும் நம்முடைய ஆர்யதர்மத்தையும், ஆசாரங்களையுமே பெரும்பான்மையும் கற்பிக்க வேண்டுமென்றெண்ணியவளாய் அவர்கள் இருவர் சொன்னதையும் ஆமோதிக்க, அச்சிறு சபையில் ஸ்திரீகளின் கல்வி முறையைப்பற்றி இவ்விதம் முடிவு செய்யப்பட்டது.

என் சிநேகி "விசாலக்ஷி", இன்னொரு விஷயம் கேட்டீர்களோ! இந்தவருஷம் ஸ்திரீகளுக்கு ஓட்டுக்கொடுக்கும் உரிமைகள் அளித்ததின் பயனாய் அவர்கள் எல்லாரும் புருஷர்களுக்கே ஓட்டளித்து விட்டார்களாம். பார்லிமெண்டு சபையில் சென்ற வருஷத்தில் அங்கத்தினராயிருந்த அதே சீமாட்டிதான் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டாளாம். அவ்வுரிமைகளுக்காக இவர்கள் எவ்வளவோ காலமாய் இங்கிலாந்தில் பாடுபட்டும் கிடைத்தவுடன் அதற்குறியவர்கள் ஆடவர்களே என்று அவர்களுக்கு தங்கள் ஓட்டுக்களை அளித்துவிட்டார்கள் போலும் என்றனள்.

இல்லாவிட்டால் ஸ்திரீகள், புருஷர்களாய் விளங்க முடியுமோ, அவர்களுக்கு உறித்தான மிருகத் தன்மையையும் புருஷர்கள் அன்பிற்கு பாத்திரமாய் இருந்துவருவதையும் இழந்து நம் நிலைமையைக்கண்டு பச்சாதாபங் கொள்வார் இல்லாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிவிடுவோம். வெகு காலமாய் இருவகுப்பின்குணமும் ஏற்பட்டிருக்கும் தன்மைகளை மாற்றுவது மதியீனமே என்றுரைத்து என்தோழி ருக்மணியையும், அவள் புருஷர் விளையாட்டாக கூறி இருப்பாரே ஒழிய, இந்த வருஷம் ஆனிமாதத்திற்குள் நிச்சயமாய் அவள்

பெண்ணுக்கு கல்யாணம் ஆகிவிடும் என்று சமாதானம் செய்தேன்.

அவளும், ஏதோ நான் கூறுவதுபோல் நடந்தேறினால் கற்பாகம்பாவுக்கு ஓர் புடவை வாங்கி சாத்துகிறேன். அவள் தான் அவர் புத்தியை திருப்பி தன்னை காக்க வேண்டுமென்று மனதை தேற்றிக்கொண்டாள். இதற்குள், கெடிகாரத்தில் டிங், டிங் என்று மணி நான்கு அடிக்க எங்கள் சபை கலையலாயிற்று. நானும் நடந்த சம்பாஷணையை சிறிது நேரம் சிந்தித்து விட்டு சூரியன் தன் ரதத்தை மேற்கு புறமாய் திருப்பி தன் செங்கிரணங்களை ஆகாய முழுவதும் பரப்ப, அவன் மேற்கு புறத்தில் மறையுமுன், நித்திய மங்கள ஸ்வரூபியான ஜகன் மாதாவை தரிசித்து வரவேண்டுமென்று கோயிலுக்குச் சென்றேன்.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச் சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்யாணகாலத்திலும் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் என்வும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்ததும் ஹேமநளினியை மறுபடி நாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; பிரயாணகாலத்தில் ஒரு நாள் இராமேசன் கமலாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும், சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா அவன்பால் கருணை கொண்டதும்; சென்ற சஞ்சிகையிலுள்ள கதை)

"சரி, மாமா, நீங்கள்தான் நிச்சயிங்கள் நாங்கள் எங்கே இறங்குவது என்பதை; கப்பல் ஊதும் ஒலியைவிட உங்களுடைய சொல்லுக்குப் பலம் அதிகம் அல்லவா ?"

"நன்றாயிருக்கிறது ; அதி சீக்கிரமாய் முடிவுக்கு வந்து விடுகிறீரே நீர் ! நாம் ஒருவருக் கொருவர் படிக்கத் தொடங்கி இன்னும் அதிக நேரமாகவில்லை ; அதற்குள்ளே நீங்கள் சொல்வது போல் நடக்கிறேன் என்கிறீரே. சரி, அப்படியானால், காஸிப்பூரில் இறங்குங்கள் ; காஸிப்பூருக்கு வருகிறாயா, அம்மா! அங்கே ரோஜாச் செடிகள் நன்றாய் வளருகின்றன; இந்தக் கிழவனும் அந்த ஊரில் தான் இருப்பது."

இராமேசன் கமலாவைப் பார்க்கவே அவளும் தனக்கு சம்மதமென்று தலையை அசைத்து ஒப்புக்கொண்டாள்.

பிற்பகலில் சக்கிரவர்த்தியும் உமேசனும், இராமேசனைத் தனிக்க விட்டுவிட்டு கமலாவுடன் பொழுது போக்குவாராயினர் ; சரத்கால வெய்யிலில் அமைதியுற்று விளங்கிய இரு கரைப்புறமும் சலிக்கும் சித்திரப் படம்போல் பிரகாசித்தது ; வயல்களும், படித்துறைகளும், மணற்சார்வுகளும், இடையிடை ஆற்றைக் கடத்தும் தோணிக்காகக் கரையிலே ஆலமரத்தடியில் காத்து நிற்கும் பிரயாணிகளும் இவ்விதமாய் கரையிலே தோற்றங்கள் மாறி மாறி வந்தன; அடிக்கடி அடுத்த அறையிலிருந்து கமலா மனங் களித்து சிரிப்பது நிச்சப்தமான அமைதியைக் குலைத்துக் கொண்டு இராமேசன் காதில் விழுந்தது.

"என்ன அழகு இவையெல்லாம்; ஆயினும் எனக்குக் கிட்டுவனவோ இவை" என்ற எண்ணமே அவன் மனதில் அடிக்கடி உண்டாயிற்று.

கமலாவின் வயதுள்ளவர்களுக்கு பயங்களும் மனக்குழப்பமும் விசாரமும் நெடுநேரம் தங்கியிராவல்லவா? இப்பொழுது முன் போலல்லாமல் பொழுது போக்குவதற்கும் வழி உண்டாகவே இராமேசன் தன்னைக் கவனிக்காதிருந்த குறையைப்பற்றியே நினைந்துருகாமல் இருந்தாள்.

சரத்கால வெய்யிலில் நாட்டுப்பிரதேசமெல்லாம் பற் பல விநோதங்களாய் பிரகாசித்தன. அவையிடையே ஓடிய ஆறும் அவற்றிற்கு ஓர் பொன்னணி போன்று விளங்கியது. இவ்விதம் ஒரு சிறு குடித்தனத்தை நடத்துகிறதினாலுண்டான சந்தோஷத்தில் ஒவ்வொரு நாளும் கபடற்ற கவிகள் நிரம்பிய புத்தகத்தின் புதியதோர் ஏடுபோல் தோன்றிற்று கமலாவின் கண்களுக்கு.

தினந்தோறும் காலையில் வேலை தொடங்கும் போது உத்சாகத்துடனே தொடங்குவாள்; உமேசன் கப்பல் காலையில் புறப்படுமுன்பேயே காய்கறிக் கூடையுடன் வந்துவிடுவான்; அவன் கொண்டுவந்தவற்றைக் கண்டு களிப்பார்கள்.

"இதோ பார்த்தீரா இந்தப் பூசணிக்காயை! இந்த அவரைக்காய் எப்படிக்கிடைத்தது உனக்கு? இதோ பார்த்தீரா, மாமா பார்க்காய்கூட கொண்டு வந்திருக்கிறான். இவையெல்லாம் இங்கே அகப்படுமென்று நான் நினைக்கவேயில்லை" என்ற இவ்விதமான பேச்சுகள் காலையில் கேட்கப்படுவன.

இராமேசன் இருந்தால்மட்டும் இவ்வித சந்தோஷம் சற்று மட்டுப் படும், ஏனெனில் அவனுக்கு உமேசன்மேல் எப்போதும் சந்தேகம்; இவைகளை அவன் திருடி வந்திருப்பான் என்று. "நான் தானே காசை எண்ணிக்கொடுத்தேன்" என்பாள் கமலா? அதற்கென்ன, ஆனால் காய்கறி திருடினவன் காசையும் அமுக்கிவிடக் கூடாதா, என்ன" என்று இமேசன் உமேசனைக் கூவி காய்கறி வாங்கி வந்ததற்குக் கணக்குக் கேட்பான். அவன் சொல்லும் கணக்கு ஒருபோதும் செலவோடு ஒத்திராது; அவன் கணக்குப்படி பார்த்தால் கொண்டுபோன காசைவிட எவ்வளவோ அதிகம் செலவழித்திருக்கவேண்டும் என்று ஏற்படும். ஆனால் எதற்கும் கூசாமல் உமேசன் "என்ன கணக்குப் போடத் தெரிந்திருந்தால், இங்கேயா இருப்பேன், தாத்தா; நான் ஒருபெரிய ஜமீனுக்கு காரியஸ்தனாக வல்லவோ இருப்பேன்" என்பான்.

அப்போது சக்கிரவர்த்தி: "குறைக்கேசையும் சாப்பிட்டானபின் விசாரிப்போமே, இராமேசபாபு; அப்போதுதான் சரியான தீர்மானத்திற்கு வரமுடியும். இப்போதென்றால், இந்தப் பையன் கக்ஷிதான் என் மனம் செல்லுகின்றது; குழந்தாய், உமேசா, சம்பாதிப்பது என்பது இலகுவல்ல, எல்லாராலும் முடியாது; எத்தனை பெயர்கள் முயல்கிறார்கள்; சிலரே ஜயம் பெறுகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டே "சாமர்த்தியத்தைக் கண்டால் மெச்சுவது என் சுபாவம், இராமேசபாபு; இது அவரைக்காய்க் காலமல்ல; அப்படியிருக்கும் போது அதிகாலையில் இவ்விதம் அயலூரில் இதற்குள் இவ்விதம் அவரைக்காய் கொண்டு வருவது என்றால் எல்லாராலும் அது சாத்தியமாகுமா? சந்தேகப்படுவது மட்டும் எல்லாருக்கும் சாத்தியம்; ஆனால் ஆயிரத்திலொருவனுக்குத்தான் தேடி சம்பாதிப்பது சாத்தியமாகும்.

இராமேசன் "இது நன்றாயில்லை, மாமா, நீரும் அவன் கக்ஷி பேசுவது"

சக்கிரவர்த்தி: "அவனுக்கு வேறொன்றும் தெரியாது தெரிந்ததையும் நாம் கொண்டாடா விட்டால் எப்படி? இந்த வித்தையெல்லாம் வீணாகா அல்லவோ போய்விடும்? இந்தா, உமேசா, நாளைக்குக் கொஞ்சம் எலுமிச்சஇலை வேண்டும்; மேற் கொப்பில்தான் நல்ல தளிராக இருக்கும்; எனக்கு வைத்தியமும் தெரியும், அது உடம்பிற்கு நல்லது என்று ஓ! பேச்சிலே மறந்துவிட்டேனே இந்தா, உமேசா இந்தக் கீரையை நன்றாய் கழுவிக்கொண்டு வா."

இராமேசன் இவ்விதம் உமேசனைச் சந்தேகித்துக் கோபிக்கக் கோபிக்க அவனுக்கும் கமலாவுக்கும் உள்ள பற்றுதல் பலப்பட்டது. சக்கிரவர்த்தியும் அந்தக் கக்ஷியைச் சேரவே கமலாவின் கக்ஷி இராமேசனைச் சட்டை செய்வது கூட இல்லை. இராமேசன் மனச்சாட்சியும் தானுமாய் தனித்திருக்க, சக்வரவர்த்தி, உமேசன், கமலா ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் பிரியத்துடனும் நேசத்துடனும் ஒத்து உழைத்து உல்லாசமாய் இருந்தனர். சக்கிரவர்த்திவந்தபின், அவருடைய உத்சாகத்தால் இராமேசனுங்கூட கமலாவினிடம் நேசம் பாராட்டத் தொடங்கினான் என்றாலும் தானும் அவளுடைய கக்ஷி என்று சொல்லும்படியாய் அவளுடம் அவ்வளவு பிரியத்துடன் நடந்து கொள்ளவில்லை; கரையோரமாய் தங்கமுடியாமல் நடுவாற்றிலேயே நின்று கரையைத் தூரத்தினின்றே சிந்தனைசெய்யும் பெருங்கப்பல்போல், மற்றைச் சிறுபடகுகளும் தோணிகளும் ஆழமற்ற கரைப்புறத்திலும் நெருங்கிப் பழகும்போது, தான் மட்டும் நெருங்க முடியாமலிருக்க நேர்ந்தது இராமேசனுக்கு.

வளர்பிறை சந்திரனின் வெள்ளொளி மங்கியது; காலையில் எழுந்திருக்கும்போது வானமெங்கும் கருமேகங்கள் சூழ்ந்திருந்தன, காற்று அங்குமிங்கும் அலைந்து சுழன்றது; வெய்யிலும் மழையும் மாறி மாறித் தோன்றின; ஆற்றில் வேறு கப்பல் ஒன்றும் காணப்படவில்லை; ஆற்றில் நீர் மொள்ளவரும் பெண்டிரும் கப்பலைப் பார்த்துக்கொண்டு தாமதியாமல் நீர் மொண்டு விரைந்து சென்றனர்; அடிக்கடி ஆற்றுப் பரப்பு காற்றலைப்பால் மயிர் கூச்செறிவதுபோல் நடுங்கிற்று. ஆயினும் புகைக்கப்பல் மட்டும் சற்றும் தயங்காது சென்று கொண்டிருந்தது. கமலாவும் சமையல்வேலையிற் தயங்கவில்லை.

வானத்தை உற்றுப்பார்த்துவிட்டு சக்கிரவர்த்தி இன்று சாயங்காலம் சமையல்செய்யமுடியாது போலிருக்கிறது, மழை வருவதைப் பார்த்தால் ஆகையால் இராத்திரிக்கும் இப்பொழுதே சமைத்துவிடுவோம் நீ ரூப்பு தயார்செய்; நான் அதற்குள் ரொட்டிக்கு மாவு பிசைகிறேன்"

அன்று பகற் சாப்பாட்டிற்கு நேரமாயிற்று; பிறகு காற்று பலப்படவே ஆற்றில் அலைகள் பொருத்துக் கிளம்பின. சாயங்காலமாகு முன்பே சூரியன் மேல் வானத்தில் கவிந்திருந்த மேகமண்டலத்துள் மறைந்துவிட்டான். கப்பலிலும் சீக்கிரமாகவே நங்கூரம் இட்டனர்.

இரவில் சந்திரன் இடையிடை மேகமத்தினூடே மங்கிய புன்னகை புரிவான்போல் ஒளி மழுங்கித் தோன்றினான்; காற்றும் பெரும்புயலாக, மழை சோ, என்று பெய்தது.

முன்னொருதரம் புயலில் அகப்பட்டறிந்த கமலாவின் மனம் நடுங்கிற்று, "ஏன் பயப்படுகிறாய்.. கமலா; புகைக் கப்பலில் என்ன பயம்? போய்த் தூங்கு விசாரமற்று; நான் அடுத்த அறையிற் தானே இருக்கிறேன்; இன்னும் நான் தூங்கும் நேரம் ஆகவில்லை"

பிறகு அவளறை வாசலிற்கு வந்த சக்கிரவர்த்தியும் "பயப்படாதே, அம்மா, எந்தப் புயற்காற்றும் உன்னைத் தொடாது? பயப்படாதே!"

கமலா பயப்பட்டாள் என்பதில் சந்தேகமில்லை. வாசலண்டை வந்து "உள்ளே வந்து உட்காரும், மாமா" என்று வேண்டிக்கொண்டாள்.

சக்கிரவர்த்தி சற்று தயங்கினார். உள்ளே நுழையுமுன்; "நீங்கள் படுத்துக்கொள்ளும் வேளையாயிற்று; நான் போகிறேனென்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழையும்போது, இராமேசன் அங்கே இல்லை என்பதைக்கண்டு:

"இதென்ன, இது; எங்கே இராமேச பாபுவைக்காணோம். இந்த ராத்திரியிலும் எங்கேயாவது காய்கறி திருடப் போய்விட்டாரோ, என்ன என்றார் பரிகாசமாய்.

"யார் அது? மாமா வா! இதோ இருக்கிறேன் அடுத்த அறையில்" என்றான் இராமேசன்.

சக்கிரவர்த்தி அடுத்த அறையுள் எட்டிப் பார்த்தார்; இராமேசன் படுக்கையில் படுத்துக்கொண்டு தலைப்புறத்தில் ஒரு விளக்கை வைத்துக்கொண்டு வாசித்திருப்பதைக் கண்டு "அகத்துக்காரி, தனியே, பயந்து படுத்திருக்கிறாள்; புயற்காற்றைப் போக்க முடியாத இந்தப்படிப்பு என்னத்திற்கு இப்பொழுது? இங்கே வா, இந்த அறைக்கு" என்று அழைத்தார் சக்கிரவர்த்தி என்பவர்.

கமலா தன்னை அறியாமலே ஆவேசமுற்றவள் போல் "வேண்டாம், வேண்டாம், மாமா" என்று அவர்கையைப் பிடித்து பின்னுக்கு இழுத்து அவரைத்தடுத்தாள்; ஊளையிட்டொலிக்கும் பெருங்காற்றில் கமலா பேசிய பேச்சு இராமேசன் காதிற் படவில்லை; சக்கிரவர்த்தி மட்டும் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார்.

—:(o):—

தேச அஷ்டகம்.

[K. N. சிவராஜ பிள்ளை.]

ஆண்டிப்பண்டாரம் என்னும் வர்ணமெட்டு.

பல்லவி.

தேச நன்மை மேல்—எமு
தாசை உண்மையே—சுய (தேச)

சரணங்கள்.

(1) சாதி எனும் சழக்கறுத்தோம்,
தீதென்பன அற வெறுத்தோம்
தீக்குணங்களை
மாய்க்க வேண்டிய
மார்க்கம் யாதென
நோக்கிச் சூழ்கின்றோம். (தேச)

(2) சுபநலமாய் துரிசு கெட்டோம்,
பயம் என்பதை தூரவிட்டோம்
தொல்லை யோர்க்கிசை
இல்லை யாம் படி
அல்லல் யாவையும்
வெல்லச் சூழ்கின்றோம். (தேச)

(3) சோம்பலையே புகுந்து வென்றோம்,
சாம்பலத்தில் புகுந்து நின்றோம்
சஞ்சலப் படா
நெஞ்சமோடு புன்
வஞ்சக மடம்
துஞ்சச் சூழ்கின்றோம். (தேச)

(4) வீரம் எனும் அணி அணிந்தோம்,
தீரம் எனும் செயல் துணிந்தோம்
வேற்றுமை யில்லா
மாற்றத்தால் வரு
ஏற்றம் என்பதைப்
போற்றிச் சூழ்கின்றோம். (தேச)

(5) உயிரும் என்ன தீங் கரும்போ,
உலைதல் இலா உருக்கிரும்போ
உதிக்கும் தீயரை
மிதிக்கக் காட்சியை
மதிக்கச் செவ்வழி
கதிக்கச் சூழ்கின்றோம். (தேச)

(6) கூட்டுறவின் குணம் அறிந்தோம்,
குடிமை தனிச்செயல் செறிந்தோம்
குறைகள் பற்பல
நிறையினும் அவை
மறைவதற்குள
முறைமை சூழ்கின்றோம். (தேச)

(7) மதிவிளக்கும் கல்வி கற்றோம்,
மாதர்களை மதிக்கல் உற்றோம்
மடமை என்பது
கெடுவதற்கெழு
கடமை தீர்ந்திடும்
திடமே சூழ்கின்றோம். (தேச)

(8) ஏனையர் செல் முறைகள் கண்டோம்,
இனிச் செய்யும் கருமம் கொண்டோம்
எங்கள் தேசம், இ
லங்கவே பலம்
பொங்கவே இசை
தங்கச் சூழ்கின்றோம். (தேச)

லக்ஷ்மிகாந்த கஸ்தூரி மாத்திரை.

இந்த சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களில் ஒன்று மிக்க அருமையான மருந்துகளால் முடிவு பெற்று வாய்வு, பித்த சிலேஷ்மத்தை அனுசரித்து வியாதிகளுக்கு தனியாக அல்லது தாம்பூலத்திலாவது உபயோகிக்க தகுந்த சஞ்சீவி.

சுமார் 200 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6.
டஜன் 1-க்கு விலை ரூ. 4.

ஸ்ரீ நடராஜ ஔஷத சாலை,
55, Narayana Mudali, Street,
G. T. MADRAS.

இந்தியாவுக்கு ஸ்வாதீனம் அதன் அவசரம்.

பரிபூரணமான ஸ்வதந்திரம் உடனே பெற்றாலன்றி பாரத மக்கள் பண்புடன் வாழ முடியாதென்று பரிசுத்த ஆத்துமாவாகும் ஆன்ட்ரூஸ் எழுதியுள்ள வியாசத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்திய மகா ஜனங்கள் பரம க்ஷீணதிசையடையலாயின ரென்றும், இதை இந்தியர் உணர்ந்து, ஒத்துழையாமையை மேற்கொள்ளின் பிரிட்டிஷ் ஆட்சியின் அடிப் படை அற்றுப் போகுமென்றும், ஆங்கில மேதாவி ஸீலி முன்னமேயே கூறி யிருப்பதை ஆன்ட்ரூஸ் எடுத்துக் காட்டி, சுயராஜ்ய வாழ்வுக்கு ஒப்பற்ற சாதானம் ஒத்துழையாமை தர்மமேயென விளக்கிச் சொல்லி யிருக்கிறார். ஸ்ரீ பாரத மாதாவின் நவரத்ன மாலை யென்னும் அரிய ஒன்பது பாக்களும் அடங்கி யுள்ளது.

விலை அணா 0—4—0

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

இனும் ! இனும் !!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தென்பதை
நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம். தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

கெ. 1.	10 கஜம்	× 25"	ரூ. 2¼ முதல்	ரூ. 3 வரை
,, 2.	12 ,,	× 27"	,, 4	,, 6 ,,
,, 3.	16 ,,	× 34"	,, 6	,, 9 ,,
,, 4.	18 ,,	× 36"	,, 8	,, 12 ,,
,, 5.	20 ,,	× 44"	,, 11	,, 13 ,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. 4¼ முதல்	ரூ. 6 வரை
9½ ,,	× 40"	,, 3	,, 5 ,,
3 ,,	× 1½ கஜ	,, 2	,, 3 ,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமானபல வியாஸங்கள் அடங்கியது.

வருஷ சந்தா ரூபாய்	2	0	0
மேல் நாடுகளுக்கு ரூபாய்	3	0	0
மாதிரிப்பிரதி அணா	0	2	0

"ஜனரஞ்சனி" ஆபீஸ்,
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ. 15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேட்லாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.